**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 20.02.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களிடையே தொழில் முனைவோர்க்கான மென்திறன் மேம்பாடு பற்றிய ஒருநாள் கருத்தரங்கு

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேம்பாட்டு கழகத்தால் ‘‘பயிற்சியாளர்களுக்கான பயற்சி’’ ஜனவரி 23 மற்றும் 24, 2023 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. இதில் 27 மாநில வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை தொடர்ந்து 100 வேளாண்மை சார்ந்த படிப்புகளை பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க பரிந்துரைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு ‘‘வேளாண் மாணவர்களுக்கிடையே தொழில் முனைவோர்களுக்கான மென்திறன் மேம்பாடு’’ 18.2.23 அன்று நடைபெற்றது.

வேளாண்மை சார்ந்த படிப்புகளான இளமறிவியல் (வேளாண்மை), இளமறிவியல் (தோட்டக்கலை), இளம் தொழில்நுட்பம் (உணவு தொழில்நுட்பம்), இளம் தொழில்நுட்பம் (சக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்), இளம் தொழில்நுட்பம் (வேளாண் பொறியியல்) மற்றும் இளமறிவியல் (வேளாண் தொழில் மேலாண்மை) போன்ற மாணவர்கள் பங்கேற்றனர். இதில் மென்திறன்களான பேச்சுத்திறன், தனிப்பட்ட நபர் திறன் மேம்பாடு மற்றும் குழு மேம்பாடு போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முனைவர் கி.உமா துறைத்தலைவர், ஊரக மேம்பாட்டுதுறை வரவேற்புரை வழங்கினார். இதைத் தொடர்ந்து நா.வெங்கடேச பழனிச்சாமி முதல்வர் (வேளாண்மை) மற்றும் தே. சுரேஷ் குமார் இயக்குநர் (வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு இயக்கம்) அவர்கள் சிறப்புரையாற்றினர். முனைவர் கி.திவ்யா இணை பேராசிரியை நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**